**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | **CC513/2004** |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 52** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | மீனாட்சிநாதபிள்ளை (எ) ஜி.எம்.நாதன் |
| Father's / Husband Name | : | த.பெ.கணேச பிள்ளை |
| Village | : | நம்பர் 05-564, கிருஷ்ணாபுரம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர் |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | மத்திய அரசு ஊழியர் |
| Age | : | 48/2019 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.08.2019**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஆர்மங்கையர்கரசி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, ச.சுரேஷ் தட்டச்சர்**

**CC513/2004** Date: 02.08.2019

முதல் விசாரணை

நான் நம்பர் 05-564, கிருஷ்ணாபுரம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர் என்ற முகவரியில் குடியிருந்து தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் அலுவலகத்தில் கணக்கு பிரிவு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1ம்எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 04.03.1999அன்று மாதம் ரூ.150வீதம் மொத்தம் 25 மாதங்கள் ஆகக்கூடுதல் ரூ.3750ஐ தஞ்சாவூர் காசுக்கடைத்தெருவில் உள்ள கணபதி நகைக்கடையில் காமதேனு தங்க நகை சேமிப்பு திட்டத்தின் கீழ் பணம் செலுத்தினேன். கடைசி தவணையாக 10.03.2001அன்று மேற்படி கடையில் செலுத்தியபோது கணபதி என்பவர் தமிழ் புத்தாண்டுக்கு முதல் நாள் ரூ.4000ம் மதிப்புடைய தங்க நகைகளை பெற்றுக்கொள்ளலாம் என்று கூறினார். நான் அன்றையதினம் கடைக்கு சென்று பார்த்தபோது கடை பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது போலீசார் கடையை சீல் வைத்துவிட்டதாக கூறினார்கள். நான் எனது தொகையை பெற்றுத்தர வேண்டி புகார் கொடுத்தேன். கணபதி நகை சீட்டு பணத்தை மோசடி செய்து பொதுமக்களை ஏமாற்றி

**CC513/2004** Date: 02.08.2019

தலைமறைவாகி சென்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் கணபதி நகைக்கடையில் நான் பணம் செலுத்தியதற்கான பாஸ்புக் சா.பொ.91ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அசா1 காசுக்கடைத்தெருவில் கணபதி ஜுவல்லரி என்ற கடை இல்லையென்றாலும், காமதேனு என்ற சிறுசேமிப்பு திட்டம் இல்லையென்றாலும், நான் முன் விசாரணையில் சொன்னது போல மேற்படி திட்டத்தில் சேரவில்லையென்றாலும், மேற்படி திட்டத்தில் எவ்வித பணமும் செலுத்தவில்லை என்றாலும், சா.பொ.91 இவ்வழக்கில் சம்மந்தமில்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக எழுதி புகார் அளித்துள்ளேன். போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் முன்விசாரணையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.91ல் நான் இரண்டு முறை பரிசுப்பொருள் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது என்ன பரிசு என்று எனக்கு ஞாபகமில்லை.

மறு விசாரணை - இல்லை

ஒ/ம்.அ.முகம்மதுஅலி
நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்.